## இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் - 2018

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- | --- |
| (அ) 2010 இன் 01 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணங்களின் 9.4 ஆம் பிரிவு | ஆங்கத்துவ நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதத்தினுள் குறித்துரைத்த எல்லையில் இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், செலுத்த வேண்டிய மொத்த இழப்பீட்டுப் பெறுமதியில் 7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 116,773,925 பெறுமதியான இழப்பீடு மாத்திரம் 2018 மார்ச் 05 ஆந் திகதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட "சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் & பைனேன்ஸ் பீஎல்சீ" இன் வைப்பாளர்களிற்கு அறு மாத்தி | இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் (SLDILSS) பல்வேறு மாற்றுவழி நடைமுறை அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்தல் வேண்டுமென்பதுடன், பதவியணியினர் மற்றும் தன்னியக்க முறைமைகள் போன்ற வளப் பற்றாக்குறையினையும் மோசமாக எதிர்கொண்டுள்ளது. மேலும், "சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் & பைனேன்ஸ் பீஎல்சீ" இனால் வழங்கப்பட்ட பூரணத்துவமற்ற வைப்பாளர் தகவல்கள் பிரதான தடையாகக் காணப்பட்டதுடன் இதுவரை அவர்களால் 11 விடுத்தங்கள் திருத்தப்பட்ட பிரதான கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த காரணங்களால், "சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் | உரிய வேளையில் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | னுள் செலுத்தப்பட்டிருந்தது. | & பைனேன்ஸ் பீஎல்சீ'' இன் வைப்பாளர்களிற்கு அறு மாதத்தினுள் மிகக் குறைவான இழப்பீட்டினைச் செலுத்த வேண்டிய நிலை SLDILSSஇற்கு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வாறான வளப் பற்றாக்குறை மற்றும் இணக்கமின்மை தொடர்பில் RED நாணயச் சபைக்கு அறிவித்துள்ளது. | |
| (ஆ) நாணயச் சபை அங்கீகரித்த இழப்பீட்டு நடைமுறையின் 1.3.1 (இ) ஆம் பிரிவு | குறித்த ஒழுங்கமைப்பாளர் (வங்கிசாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை பணிப்பாளர்) இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் தொழிற்படு குழுவிற்கு ஒழுங்கமைப்பாளர் சான்றுறுதிப்படுத்திய வைப்பாளர் பட்டியலை சமர்ப்பித்தல் வேண்டும். சான்றுறுதிப்படுத்திய வைப்பாளர் பட்டியலின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்தல், குறித்த ஒழுங்கமைப்பாளரால் நேரடியாகவோ அல்லது கணக்காய்வாளர் ஒருவரின் ஊடாகவோ அங்கத்துவ நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்கு மேற்படாத காலத்தில் | வரைபு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் நாம் இணங்குகின்றோம். | செயன்முறையினை துரிதப்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. |

மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், மேற்படி வைப்பாளர் பட்டியல், ஒழுங்கமைப் பாளரால் (வங்கிசாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை பணிப்பா ளர்) சான்றுறுதிப்படுத் தப்பட்டிருக்கவில்லை. வங்கிசாரா நிதி நிறுவ னங்களின் மேற்பார்வை பணிப்பாளரால் அவ்வா றான ஒழுங்கமைப்பாளர் சான்றுறுதிப்படுத்திய வைப்பாளர் பட்டியலை சமர்ப்பிக்க முடியாதுள் ளமை தொடர்பிலுள்ள சிக்கல்களை நாணயச் சபைக்கு அறிவித்தமை யால் மாற்றுவழியினைப் பின்பற்றுவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியு ள்ளது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 7,751.42 மில்லியன் வரிக்குப் பின்னரான மிகையினை விளைவித்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான மிகை ரூபா 9,865.96 மில்லியனாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,114.54 மில்லியன் பின்னடைவொன்றை காட்டுகின்றது. மீளாய்வாண்டில் வருமான வரிக்கான ஏற்பாடும் இழப்பீட்டிற்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டமையே இதற்கான காரணங்களாகும்.

(ஆ) திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின் படி, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியக் கணக்கின் மீதி நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 44,123.26 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 7,751.42 மில்லியன் அல்லது 17.56 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்திருந்து மேற்கொண்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் 9.10 ஆம் பிரமாணத்தின் பிரகாரம், 01 சனவரி 2012 அல்லது அதற்குப் பின்னர் நாணயச் சபையினால் கட்டளையிடப்பட்டவாறான இடைநிறுத்தல்கள்/ இரத்துச்செய்தல்கள் விடயங்களிற்காகவே இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். அதற்கமைய, ‘‘சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் & பைனேன்ஸ் பீஎல்சீ’’ இனதும் ‘‘ஸ்டேன்டர்ட் கிரடிட் பைனான்ஸ் லிமிடட்’’ இனதும் அனுமதிப்பத்திரங்கள் நாணயச் சபையினால் முறையே 2018 மார்ச் 05 மற்றும் 2018 யூலை 25 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாயட்வாண்டில் 1340 வைப்பாளர்களிற்கு ரூபா 597,613,713 பெறுமதியான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. | வரைபு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் களுடன் நாம் இணங்கு கின்றோம். | தகுதியுள்ள வைப்பாள ர்களிற்கு கொடுப்பன வுச் செயன்முறை யினை துரிதப்படுத்து மாறு பரிந்துரைக்கப் படுகின்றது. |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரின் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி திட்டத்தினால் பின்னுாட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு பிணையினை யும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார். | வரைபு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் களுடன் நாம் இணங்கு கின்றோம். | முதலீட்டு வழிகாட்டல் களுடன் இணங்கியொ ழுகுமாறு பரிந்துரைக் கப்படுகின்றது. |

| | |
|---|---|
| (ஆ) 2015 திசெம்பர் 04 ஆந் திகதி எடுக்கப்பட்ட சபை தீர்மானத்திற்கமைய மேற்படி முதலீட்டினை பிணை தேவையற்ற முதலீடாக சுழலவிடுவதற்கு மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, மேற்படி முதலீட்டின் மீது ரூபா 144.25 மில்லியன் கழிவுநட்டமொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 வரையிலும் மேற்படி முதலீடு சுழன்று வந்திருந்ததுடன், 2018 திசெம்பர் 31 வரையிலான மேற்படி முதலீட்டின் மீதான மூடப்படாத வட்டித் தொகை ரூபா 39.04 மில்லியனாக இருந்தது. | வரைபு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் களுடன் நாம் இணங்கு கின்றோம். |